Canadian assistance for Agriculture

*114 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Government held any discussion with the Canadian High Commissioner in India in October 1967 in regard to assistance for the development of agriculture in this State; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :

(அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

Veterinary Hospital for Tiruttani

*115 Q.—Thiru K. VINAYAKAM : Will the hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is a proposal to construct a Veterinary Hospital in Tiruttani, Chingleput district ; and

(b) if so, the estimated cost thereof ?

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : (அ) and (இ) : இப்பொழுது திருத்தணியில் கால்நடை மருத்துவமனை எதுவும் இல்லை. ஆனால் கால் நடை மருந்தகம் ஒன்று உள்ளது. இது வாடகைக் கட்டிடத்தில் செயல் பட்டு வருகிறது. தற்பொழுது திருத்தணி ஊராட்சி ஒன்றியம் மேற்படி கால்நடை மருந்தகத்திற்காக கட்டிடம் ஒன்றைக் கட்டிக் கொண்டிருக் கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மை மான்யத்தின் கீழ் ஒவ்வொரு மருந்தகத்திற்காகவும் ஒதுக்கியுள்ள 30,000 ரூபாயையும் இதற்காக ஊராட்சி ஒன்றியம் கொடுக்கும் பங்குத் தொகையாகிய 10,000 ரூபாயையும் பயன்படுத்தி அக் கட்டிடம் கட்டப்பட்டுவருகிறது.

திரு. கே. விநாயகம் : திருத்தணியில் இப்போது இருப்பது வில்லேஜ் கி சென்டர் தான். அது வாடகைக் கட்டிடத்தில் இருக்கிறது. இதற்குப் பணத்தை ஒதுக்கி இடத்தைத் தேர்ந்தெடுத்து கொடுத்த பிறகும் கட்டடம் கட்டப்படாமல் இருப்பதற்கு, அப்படி தாமதமாவதற்கு காரணம் ஏதாவது உண்டா ? அப்படிக் கட்டுவதாக இருந்தால் எந்த வருடத்தில் அது முடியும் ? அதைத் திறந்து வைக்க அக்ரிகல்ச்சரல் மினிஸ்டர் வருவாரா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்போது திருத்தணியில் இருப்பது வெட்டரினரி டிஸ்பன்சரி. டைரக்டர் ஆஃப் அனிமல் ஹஸ்பண்டரி கொடுத்த புள்ளிவிவரத்தை வைத்துச் சொல்கிறேன். இந்த கால்நடை மருந்தகம் கட்டப்பட்டு வருகிறது. அதற்காக அரசாங்கத் தரப்பில் 30,000 ரூபாயும், பஞ்சாயத்து ஒன்றியம் 10,000, ஆக, 40,000 ரூபாயில் கட்டப்பட்டு வருகிறது. அங்கத்தினர் விரும்பினால் வருவது குறித்து ஆட்சேபணை இல்லை.

படிப்பு உதவிப்பணம்.

*116 வினா—**திரு வி. கே. கோதண்டராமன், திருமதி கே. பி. ஜானகி யம்மாள், திரு எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கும் விஷயத்தில் அனுஷ் டிக்கப்படும் கொள்கை என்ன?